கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

29.11.2022

**அசல் வழக்கு எண். 148/2020**

**வா.சா. 1 – விருமாண்டி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் : 12.10 PM**

என் அப்பாதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் பிராதில் என் அப்பாதான் கையெழுத்து செய்தார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு விபரங்கள் என் அப்பா சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றும் நேரடியாக எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என் அப்பாவிற்கு வயது 80 இருக்குமா என்று கேட்டால் 98 வயதாகும். ஒரு விசயத்தை அவரிடம் சொன்னால் புரிந்து கொள்ளும் தன்மை அவரிடம் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக பிரச்சினை ஏற்பட்டபோது காவல் நிலையத்தில் வந்து நான்தான் புகார் கொடுத்தேன் என்று சொன்னால் ஆம் நான்தான் கொடுத்தேன். என் அப்பா வந்து நேரடியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என் அப்பா தாக்கல் செய்த பிராதில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் கையெழுதது செய்யவில்லை. தாவா சொத்து ஆதியில் பேயாண்டித்தேவருக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று சொன்னால் தெரியாது. அது மாயாண்டித்தேவரின் இடமாகும். அவரிடம் இருந்து என் அப்பா ஆலமரத்தான் என்ற விருமாண்டி கிரையம் வாங்கியுள்ளார். பேயாண்டி யார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் ஆம் எனக்கு தெரியாது. பேயாண்டித்தேவருக்கு இரண்டு மக்கள் என்றும், அதில் முதலாவது நபர் கழுவத்தேவர் என்றும், இரண்டாவது மகன் சுப்பையாத்தேவர் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. கழுவத்தேவருக்கு கருத்தகண்ணு, முத்து விருமாண்டி மற்றும் மாயாண்டி என்று 3 மக்கள் என்று சொன்னால் மற்ற இரண்டு நபர்களை பற்றி தெரியாது. மாயாண்டி மட்டும்தான் எனக்கு தெரியும்.

பிராது சொத்து விபரத்தில் சர்வே எண். 43/14 புஞ்சையில் 25 செண்ட் என் தகப்பனாருக்கு கிரையப்பாத்தியப்பட்டதாகும் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதே கிராமத்தில் சர்வே எண். 43/2ல் 30 செண்டில் பிரிவினையில்லாத எங்கள் பாகம் 2 செண்ட் மொத்தம் 27 செண்டிற்கு என் அப்பா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அதேபோல் சொத்துவிபரத்தில் 2வது அயிட்ட சொத்தில் 30 செண்டிற்கு மால் என தெற்கே அமலாமலை புறம்போக்கு என்றும், கிழக்கே அமலாமலை புறம்போக்கு என்றும், வடக்கே மு.ராசுதேவர் புஞ்சைக்கும், தங்கள் வகையறா புஞ்சைக்கும், மேற்கே எங்கள் வகையறா புஞ்சைக்கும் இதற்குட்பட்ட 30 செண்டில் பிரிவினையில்லாத 2 செண்டிற்கு கிரையம் என நான்குமால் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1ல் 30.05.1983ல் மாயாண்டித்தேவர் தனக்காகவும், தனது மைனர் கணேசனுக்கு கார்டியனாகவும் மற்றும் இன்னொரு மகனுக்கும் சேர்ந்து என் அப்பாவிற்கு கிரையமாக எழுதிக் கொடுத்துள்ளனர் என்று சொன்னால் சரிதான். பிராதில் 1வது இலக்க சொத்து 14 செண்ட் என காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதேபோல் வா.சா.ஆ.2வது ஆவணமான 05.07.1971ம் தேதி கழுவத்தேவர் மகன் விருமாண்டி, விருமாண்டி மகன் பாண்டியும் சேர்ந்து கழுவத்தேவர் மகனும், விருமாண்டியின் சகோதரருமான மாயாண்டிக்கு 14 செண்ட் கிரையம் கொடுத்துள்ளதாக பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் 27 செண்ட் மட்டும்தான் என் அப்பாவிற்கு கிரைய பாத்தியமாகும். தாவா சொத்து வாங்கும்போது மொத்தம் 3 ஏக்கர் 76 செண்ட்டில் கழுவத்தேவர், சுப்பையாத்தேவர் ஆகியோர்களுக்கு சேர்ந்து 76 செண்ட் பாத்தியம் என்றும், 76 செண்டில் கழுவத்தேவருக்கு 38 செண்ட் என்றும், சுப்பையாத்தேவருக்கு 38 செண்டும் பிரிவினையில்லாத பாகம் இருந்தது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. எங்களுக்கு 27 செண்ட் மட்டும்தான் தெரியும். மேற்கண்ட 76 செண்டில் சுப்பையாத்தேவர் மகன் மாரியப்பனுக்கு 38 செண்டும்,

கழுவத்தேவருக்கு 38 செண்டும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியான கருத்தகண்ணு மகன் பாண்டியை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. முத்துவிருமாண்டி மகன் முத்துகண்ணன், மாரியப்பன் ஆகியோர்களை தெரியுமா என்று கேட்டால் தெரியாது. மாயாண்டித்தேவர் மகன் முனியாண்டி, கணேசன், லெட்சுமணன் ஆகியோர்களை தெரியுமா என்று கேட்டால் தெரியும். முனியாண்டித்தேவர் எனது தகப்பனாருடன் பிறந்த சிறிய தகப்பனார் என்று சொன்னால் சரிதான். அவர் சர்வே எண்.43/2ல் செண்டு 30ல் பிரிவினையில்லாத செண்டு 3 ல் செண்டு 1ஐ மட்டும் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. எனது சித்தப்பா முனியாண்டித்தேவர் சர்வே எண்.43/14ல் மொத்தம் 3 ஏக்கர் 76 செண்டில் அவரது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட 36 செண்டில் 12-3/4 செண்டு கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. அவர் யாரிடம் வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் தெரியாது. அவர்கள் வாங்கிய சொத்துவிபரம் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் ஆம் எனக்கு தெரியாது. மொத்தம் 30 செண்ட் தனக்கு பாத்தியமுள்ளதாக என் அப்பா பிராதில் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 27 செண்டிற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கு கிழக்கே முனியாண்டி, அழகம்மாள் உள்ளனர். மேற்கே காமாட்சியம்மாள், தெற்கே தேவதங்கச்சாமி, வடக்கே அமணாமலை புறம்போக்கு. இந்த சொத்திற்குத்தான் என் அப்பா வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எங்களுக்கும், என் சித்தப்பா முனியாண்டிக்கும் சொத்துக்கள் சம்மந்தமாக அடிக்கடி பிரச்சினை வருமா என்று கேட்டால் பிரச்சினை வராது. மொத்தம் உள்ள 76 செண்டில் 38, 38 செண்டாக சொத்து பிரிக்கப்பட்டுள்ள விபரம் தெரியுமா என்று கேட்டால் பிரிக்கப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா 27 செண்டிற்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்திற்கு கிரையப்பத்திரம் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால்

சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலமாக 14 செண்டு மட்டும்தான் மாயாண்டித்தேவர் கிரையம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் மொத்தத்திற்கு மாயாண்டி 27 செண்ட் கொடுத்துள்ளார். வா.சா.ஆ,3 ஆவணமான என் அப்பா பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டா சர்வே எண். 43/14 ஏ, 14 டி, 43/14 எப், 43/2 பி இந்த சர்வே எண்கள் பிராதில் என் தகப்பனாரால் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் என் அப்பாவிற்குத்தான் அதுபற்றி தெரியும். அதேபோல் வா.சா.ஆ.3. பட்டா வாங்கிய விபரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என் சொந்த ஊர் கீழக்குயில்குடி என்று சொன்னால் சரிதான். கருமாத்தூரில் விருமாண்டி என்ற பெயரில் குலதெய்வம் உள்ளது என்று சொன்னால் சரிதான். அங்குபோய் நாங்கள் சாமி கும்பிடுவோம். எங்கள் ஊரில் தலைப்பிள்ளைக்கு விருமாண்டி என்ற பெயர் வைப்பார்கள் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ல் முதல் ரசீதில் ஆலமரத்தான் என்ற விருமாண்டி என்றும், இரண்டாவது ஆவணத்தில் சி.வி.ஆலமரத்தான் என்றும், 3 வது ஆவணத்தில் சி.ஆலமரத்தான்.வி என்றும், மற்றொரு ஆவணத்தில் ஆலமரத்தான் என்றும், இன்னொரு ஆவணத்தில் ஆலமரத்தான் என்றும், மற்றொரு ஆவணத்தில் ஆலமரத்தான் என்றும், மற்றொரு ஆவணத்தில் ஆலமரத்தான் என்ற விருமாண்டித்தேவர் என்றும், மற்றொரு ஆவணத்திலும் ஆலமரத்தான் என்ற விருமாண்டித்தேவர் என்றும் மாறிமாறி சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு இது பற்றி தெரியாது. வா.சா.ஆ.5 ஆன தாவா சொத்து பிரச்சினை சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுததேன் என்றும், என் அப்பா புகார் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். என் அப்பா வா.சா.ஆ.5 புகாரினை வந்து நேரடியாக புகார் கொடுக்கச் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

**முடிவடைந்த நேரம் : 12.55 PM**

Sd/– விருமாண்டி

Sd/–G.Ramasankaran,
ADM, Thirumangalam.